மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி

அசல் வழக்கு எண்.13/2014

வாக்குமூலம். வா.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சச்சிதானந்தம் | ஜாதி | |
| த/பெ. | தங்கவேல் | மதம் | |
| கிராமம் | | தொழில் | |
| தாலுகா | | வயது | 67 /2022 |

1873-ம் வருடத்து 10-ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு 18-10-.2022 ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

**முதல் விசாரணை தொடர்ச்சி**

என் பாட்டி காத்தாயி அம்மாளின் இறப்புச்சான்றிதழ் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது பாட்டி காத்தாயி அம்மாளின் வாரிசு சான்றிதழ் அசல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 3.8.1938 ஆம் தேதிய எனது பாட்டி காத்தாயி அம்மாள் செல்லத்தம்மாள் என்பவரிடம் இருந்து கிரையம் பெற்ற கிரையப்பத்திரத்தின் அசல் மழையில் அழிந்து விட்டதால் அதன் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். மேற்படி ஆவணம் பிரதிவாதி தரப்பில் அசல் ஆவணம் இல்லையென்ற ஆட்சேபனையுடன் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

18.06.1942 ஆம் தேதிய எனது பாட்டி காத்தாயி அம்மாள் மற்றும் அவரது சகோதரி குப்பம்மாள் ரெத்தினவேல் பிள்ளை மனைவியிடம் இருந்து கிரையம் பெற்ற கிரையப்பத்திரத்தின் அசல் மழையில் அழிந்து விட்டதால் அதன் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். மேற்படி ஆவணம் பிரதிவாதி தரப்பில் அசல் ஆவணம் இல்லையென்ற ஆட்சேபனையுடன் வா.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதனால் தாவாப்படி தீர்ப்பாக பிரார்த்திக்கிறேன்.

**வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இனங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**